DINAMALAR-24-MAY-2015

நிலத்தடி நீரை சேமிக்கலாம் வாங்க!

கிராமங்களில் 15 வருடங்களுக்கு முன்புவரைதண்ணீர்தேவையென்றால் கிணற்றில்இறைக்கப்படும்.அதிலும், ஒவ்வொரு ஊரிலும் நல்ல தண்ணிக் கிணறு-உப்புத்தண்ணி கிணறு என இரண்டு வகைகிணறுகள்இருக்கும். வீட்டிற்கு வந்தவர்களுக்கு தண்ணீர் கொண்டு வந்து வைத்தால், 'நல்ல தண்ணி பானையிலதான மொண்டு வந்த...?'என்றுகேட்டுஐயம்தீர்ந்தபின்பே தண்ணீரைகுடிக்கக்கொடுப்பார்கள்.

இப்போது,அந்தகேள்வியெல்லாம் வழக்கொழிந்து போய்விட்டது. ஒரு ஃபோன் செய்தால்போதும் மினரல் வாட்டர்கம்பெனியிலியிலிருந்துதண்ணீர் கேன்கள் வீடுதேடி வந்து விடுகின்றன. இதுநாகரீகவளர்ச்சியையோ அல்லதுபொருளாதாரவளர்ச்சியையோ குறிப்பதாகஇல்லை, இதுநிலத்தடிநீர் இல்லாமல்போனதையும்உப்பாகிப் போனதையுமேகாட்டுகிறது.

முன்புநகரமானாலும்கிராமமானாலும் வீட்டிற்கு பின் புறத்தில் கேணி அமைந்திருக்கும்.இப்போதோபுதுவீடு கட்டப்படும்போது ஒரு போர்வெல் போடப்படுகிறது.அதுவும்குடிநீருக்காக என்றுநினைத்தாலேபயமாகஉள்ளது. பாத்திரங்கள்கழுவுவது,துணிதுவைப்பது போன்ற பிற தேவைகளுக்காக மட்டுமேஅந்தத்தண்ணீர்!ஆனால்எழு நூறுஅடிதுளைபோட்டபின்னும்அந்த போர்வெல்லில்தண்ணீர்வருகிறதா, வெறும் காற்று மட்டுமே வருகிறதா என்பது அவரவர் அதிர்ஷ்டத்தைப் பொறுத்ததே!

எப்படி வந்தது இந்நிலை?!

தண்ணீர்ஆவியாகி,மேகமாகி,பின் குளிர்ந்து மழையாகப் பொழிகிறது என்றஅறிவியலைநாம்ஆறாம்வகுப்பு பாடத்திலேயே படித்துவிட்டோம். ஆனால், 'நிற்க அதற்குத் தக' என்ற வள்ளுவரின்வாக்கைமறந்து,படித்ததை செயல்படுத்த தவறிவிடுகிறோம். மழையாகப் பொழியும் தண்ணீரை நாம்நமதுநிலத்தடியில்சேமித்துவைக்க ஊடகமாக இருந்த மண் தரைகளை யெல்லாம்சிமெண்ட்ரோடுகளாகவும் தார்ச்சாலைகளாகவும்மாற்றிவிட்டோம்.

தரையில் விழும் தண்ணீர் நிலத் தடிக்குச்செல்லவழியில்லாமல்,நேராக பள்ளத்தை நோக்கி ஓடிவிடுகிறது. நாம்பயன்படுத்தும்டாய்லெட்கழிவு நீரும்துணிதுவைத்த நீரும் மட்டுமே நிலத்தடிக்குச் செல்கிறது. இதனால் நமது நிலத்தடி நீர் குறைவதோடு, நிலத்தடிநீரின்உப்பளவுஅதிகமாகிகுடிப் பதற்குஉகந்ததாகஇல்லாமல்போனது.

நமது நிலத்தடி நீர்மட்டம் என்பது பேங்கில் இருக்கும்பண இருப்பைப் போலத்தான். அதில் நாம் போட்டு வைத்தால்தான்திரும்பஎடுத்துசெலவு செய்ய முடியும். நிலத்தடி நீர் சேகார மாவதற்கான வழிகளையெல்லாம் நாம்மூடிவிட்டு,இயற்கையைகுறை சொல்வதில் என்ன நியாயம் இருக்கிறது?!

இதற்கு தீர்வு என்ன?

நமதுவீடுகளில்மழைநீர்சேகரிப்பு அமைப்பை உருவாக்கி, நிலத்தடி நீர்மட்டத்தைஅதிகரிப்பதேஇதற்குசரியானதீர்வாகஇருக்கும்.மழைநீரானது வீணாகி ஓடி சாக்கடையில் கலந்து விடாமல், வீட்டோரத்தில் மழைநீர் சேகரிப்பு தொட்டியில் சேரும்படி செய்தால், நமது நிலத்தடி நீர்மட்டம் உயர்வதோடுநிலத்தடிநீரின்உப்பளவு கணிசமாகக் குறையும்.

மழைநீர்பலநாட்களுக்குக்கெடாமல் இருக்குமென்பதால் குடிப்பதற்கும் பிற உபயோகங்களுக்கும் நாம் பயன்படுத்திக்கொள்ளமுடியும்.

தமிழகத்தின்பசுமைப்பரப்பைஅதி கரிக்கும்நோக்கில்சத்குருஅவர்களால் துவங்கப்பட்டஈஷாபசுமைக்கரங்கள் திட்டமானது,தமிழகெங்கும்நர்சரிகளை உருவாக்கிமரக்கன்றுகளைகுறைவான விலையில்விநியோகித்துவருகிறது. ஆனால் என்னதான் மரக்கன்றுகள் உருவாக்க ஆர்வமும் தோவையான இடமும் இருந்தாலும் நிலத்தடி நீர் இல்லாததால்பலஇடங்களில்நர்சரிகள் உருவாவது சிரமமாகவே உள்ளது. நமதுவீட்டின்நலனும்நாட்டின்நலனும் நம்நிலத்தடிநீர்மட்டம்உயர்வதிலேயே உள்ளது. மழைநீர்சேகரிப்பேஇதற்கு சரியான தீர்வாக இருக்கும்.

ஈஷா பசுமைக்கரங்கள் திட்டம்

தமிழகத்தில் மொத்தம் 37 நாற்றுப் பண்ணைகளை உருவாக்கியுள்ள பசுமைக்கரங்களின்தன்னார்வத்தொண் டர்கள்,எளிதில்வளரக்கூடியசெண்பகம், மகிழம், மந்தாரை, ஜக்ரண்டா,

அவலாண்டா,லகஸ்ட்ரோமியாபோன்ற அழகிய வண்ணப்பூக்கள் பூக்கும் மரக்கன்றுகள்மற்றும்பலா,எலுமிச்சை, நாவல் போன்ற பழ மரக்கன்றுகளும் ஈஷாநாற்றுப்பண்ணைகளில்இதற்காகப் பிரத்யேகமாக தயார் செய்து வழங்கு கிறார்கள். புங்கன், வாகை, தேக்கு, செஞ்சந்தனம் மற்றும் மலைவேம்பு போன்றமரப்பயிர்வகைகளும்உற்பத்தி செய்யப்படுகின்றன.இவையனைத்தும் மிகக் குறைந்த விலையில் (₹5) விநி யோகம் செய்யப்படுவது குறிப்பிடத் தக்கது.

உங்கள்ஊருக்குஅருகிலுள்ளஈஷா நாற்றுப் பண்ணைகளில் மரக்கன்று களைப் பெறுவதற்கும், மரம் நடுதல் தொடர்பான வழிகாட்டுதல்களைப் பெறுவதற்கும்கீழ்க்கண்டஎண்ணைத் தொடர்புகொள்ளவும். தொ.பே.94425 90062.